## MEDITATION AND PSYCHOLOGY

It is worse to be afflicted in mind than in body; those who afflicted in body only suffer, but those who afflicted in mind both suffer and do ill. Nowadays many people live their lives in mental sufferings and desperations. Though meditation and psychology deals with mind, they differ in their functions. Human mind is termed as a psyche; psychology helps a person to know himself and the surroundings which lead to some psychological problems; meditation helps to overcome these problems. So meditation is a exercise given to the mind, whereas psychology is the study of mind and its behaviour. Human behaviour is extremely complex. There are some people who manage their problems by using their intellect, skills and personality; they lead a successful life. Some are unable to manage and cope up with the environment; these people lead an unsuccessful life. Here psychology helps these people to know what is the defect in them and meditation helps to solve those problems. Psychopaths are people who severely suffer from emotional and mental feelings. Psychotherapy is the treatment to mental, emotional problems by psychological methods. So, meditation is a psychotherapy given to psychopaths; it is a method of healing the mental illness by tracing them to events in the person's early life and bringing those events to light. Meditation is to think about or give oneself up to serious thought and going deeper inside.

Our Simplified Kundalini Yoga is similar to psychology; it clearly says about the meaning of life and how to live a successful life. It covers both physical and mental aspects. It also helps to mold a person into great personality. Persons who practice medication can have: i) Simplest useful way of life, ii) Peace of mind, iii) Time managing ability, iv) Smile and beauty, v) Emotions free life and vi) Easeful body. They can easily differentiate what is right and wrong; they will have the capacity to protect themselves from the unwanted thoughts and become 100 per cent in their style of living. Another major point in our meditation is that the youngesters will be highly benefited to overcome their teenage problems. So as a whole, meditation is needed to each and every individual to lead a happy life.

Compiled : **Brahmagnani P. Yagatha,**
D/o. A/N. S. M. Panneerselvam,
P.N. Pudur, Coimbatore - 41.



# அறிவுத் திருக்கோயில்

## பா.நா. புதூர், கோயமுத்தூர்

# திறப்பு விழா சிறப்பு மலர்

## 16.09.2004 வியாழக்கிழமை

**(தாரண ஆண்டு ஆவணி மாதம் 31ம் தேதி)**

## இறைவணக்கம்

ஆதியெனும் பரம்பொருள்மெய் எழுச்சி பெற்று
அணுவென்ற உயிராகி, அணுக்கள் கூடி,
மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக் கேற்ப,
மூலகங்கள் பலவாகி, அவையிணைந்து
பேதித்த அண்டகோடிகளாய் மற்றும்
பிறப்புஇறப் பிடைஉணர்த லியக்க மாகி,
நீதிநெறி யுணர்மாந்த ராகி வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்

## குரு வணக்கம்

அண்டமதில் உருவெடுத்து அறிவைப் பெற்று
அவ்வறிவு ஒன்று முதல் ஆறதாகிக்
கொண்ட மேலாம் இவ்வுருவில் குறிப்பில்லாமல்
கோடான கோடி எண்ணியனுபவித்துக்
கண்டபலன் எனையறிய நினைந்தேனப்போ
கருத்துணர்த்தி கனல்மூட்டிக் கருவாம் ஞானக்
குண்டலினி எனும் என்மெய்யுணர் வெழுப்பிக்
குறித்து எனையறிவித்த குருவே அன்பே



**சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது** - என்று கூறுவர்; இந்தத் தத்துவத்தை புரிந்து கொண்டு வாழ்க்கைத் துணைவருக்கு தகுந்த மதிப்பளித்து வாழ வேண்டும்.

அன்பான கணவன்-மனைவி உறவே குடும்ப அமைதிக்கு அஸ்திவாரம்; குடும்பத்தில் அமைதி நிலவ ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் என்ற மூன்றையும் கடைபிடித்து வருதல் வேண்டும். பிறர் குற்றத்தைப் பெரிது படுத்தாமையும், பொறுத்துலும் மறத்தலும் அமைதிக்கு வழி வகுக்கும். குடும்பத்தில் பிணக்குகள் தோன்றுவதற்குப் பால் உணர்வும் உறவும் முக்கிய காரணங்களாகின்றன. குண்டலினி யோகம் பயின்ற தம்பதிகள் ஒருவர் மற்றவர் மனப்போக்குக்கும், உடல் தேவைக்கும் மதிப்புக் கொடுக்கும் வகையில் தங்களது பாலுறவு வேட்கையை மாற்றி அமைத்துக் கொள்வர்.

ஒரு குடும்பத்தையே தாங்குகின்ற அச்சாணியாக பரந்த இதயத்தோடு வாழ்பவள் பெண்ணாவாள். மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால் மனையாளும் தெய்வமன்றோ! என்று மனைவியைத் தெய்வமாக மதித்துப் போற்றுகிறார் மகாகவி பாரதி. பெண்ணின் உயர்ந்த மதிப்பை அறிந்து, பெண்ணிற்குண்டான தக்க மதிப்பை கொடுக்கும்போதுதான். குடும்பத்தில் இளைத்தன்மை குடிகொள்ளத் தொடங்கும்; குடும்பம் கோவிலாகவும் மாறிவிடும்; நமது மனவளக்கலையும், அதனால் பெற்ற மனோசக்தியும், ஆற்றலும் குடும்ப அமைதி காக்க நமக்கு உதவும்; குடும்ப அமைதி சமுதாய அமைதியைத் தரும்; அதனால் உலக அமைதி காலத்தால் வந்து சேரும்.

**-மகரிஷி**

தொகுப்பு : **அ.நி. Dr. L. தேவராஜன்**
கோவை - 41.

---

## கைமாற்று இரவல்

**கைமாற்று** : கடன் பெற்ற பொருளை உபயோகித்து விட்டு, வேறு பொருள் கொடுத்தல் (உ-ம்) ஒரு டம்ளர் சர்க்கரை வாங்கி உபயோகித்துவிட்டு வேறு சர்க்கரையை திருப்பி தருதல்

**இரவல்** : வாங்கிய அதே பொருளைத் திருப்பித் தருதல்; ஒரு புத்தகத்தை வாங்கி படித்துவிட்டு அதே புத்தகத்தை திருப்பித்தருதல். **- மகரிஷி**

தொகுப்பு : **அ.நி. S.M. பன்னீர்செல்வம்,**
கோவை - 41.

என்று கவிதையாகக் கூறி மலர் போன்ற மென்மையான மனதையுடைய அன்னைக்கு மலரினை அளித்தார்கள்; அருளன்னை அவர்களும் உவகையோடு, உள்ளக் கனியாகத் திகழ்கின்ற அருட்தந்தை அவர்களுக்குக் கனியைக் கொடுத்தார்கள். அன்று முதல் ஆண்டுதோறும் அனைத்து மன்றங்களிலும் ஆகஸ்ட் 30ம் நாள் மனைவி நல வேட்பு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. மனைவியை மதித்து போற்ற வேண்டும் என்பதுதான் அருட்தந்தை அவர்களின் மனைவி நல வேட்பு விழாவின் நோக்கமாகும்.

இரு மனங்கள் இணைகின்ற வைபோகமே திருமணமாகும். மனித வாழ்வில் திருமணம் என்பது அளவற்ற புனிதம் நிறைந்த உறவின் திறவுகோலாகும். ஒருவருக்கொருவர் ஆதாரமாகவும், ஆதரவாகவும் அமைத்துக் கொள்ளும் உறவுதான் கணவன்-மனைவி உறவாகும். "ஒருவருக்கு ஒருவர் தனக்குத்தான் பாத்தியம்" என்று நினைக்கும் இந்தத் தாம்பத்திய உறவானது உப்பையும், கசப்பையும் இனிப்பாக்கக் வல்லது; புதுப்புது உறவுகளை உருவாக்குவதும் இந்தத் தாம்பத்திய உறவுதான்.

ஆனால், இன்றோ, நமது அறியாமையினால், நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்கின்ற பொருளாதாரச் சிக்கல்களினால், அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகளினால், தனது ஆதிக்கமே நடைபெற வேண்டுமென்ற தன்முனைப்பால், ஒருவரின் பெருமையை ஒருவர் உணராத சிறுமையினால் பல இல்லங்களில் கணவன்-மனைவி உறவானது தனது புனிதத்தை இழந்து வெறும் புழுதியாகிப் போயிருப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். கணவன்-மனைவி உறவின் வீழ்ச்சியிலிருந்துதான் சமுதாயத்தின் அத்தனை வீழ்ச்சிகளும் ஆரம்பமாகின்றன; அதன் விளைவாக ஏற்படுகின்ற துன்ப அலைகளானது அவர்களைப் பெற்ற பெற்றோர்களையும், அவர்களால் பெற்றெடுக்கப்பட்ட பிள்ளைகளையும் பாதிக்கின்றன.

தனக்குக் கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி தம்பதியர் யாருக்கும் குறையிருக்கத் தேவையில்லை. அவரவர்களுடைய அடி மனமே வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கிறது; அவரவர்கள் மனதின் தரத்தைக் கொண்டு அவரவர்களுக்கு வாழ்நாளில் என்னென்ன இன்பம், துன்பம் வரவேண்டுமோ அதற்கு சரிபங்கேற்க ஒரே ஒருவரால்தான் முடியும்; அந்த ஒருவரை அவரவர் அடிமனமே, கருமையமே, சஞ்சித கர்ம பதிவுகளே, தேர்ந்தெடுக்க அது பலபேர் மனதில் பிரதிபலித்து மற்றவர்கள் வெறும் கருவிகளாக இருந்து திருமணத்தை நடத்தி வைக்கின்றனர்; இதனால்தான் - **மனம் போல் மாங்கல்யம், திருமணம்**





*பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை, கோவை - 41.*


## அறங்காவலர் குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | **அ.செ. P. சீனிவாசன்,** M.A., DECE, DPM<br>**Ph : 2456743** |
| **உதவி தலைவர்** | : | **அ.செ. K. ரங்கநாதன்**<br>**Ph : 2435435, 3218612** |
| **செயலாளர்** | : | **து.பே. Dr. L. தேவராஜன்,** Ph.D.<br>**Ph : 2445979, 98427-81564** |
| **உதவி செயலாளர்** | : | **அ.நி. K. ஜெயராமன்**<br>**Ph : 2456241** |
| **பொருளாளர்** | : | **அ.நி. G. கணேசமூர்த்தி,** B.Sc., (Hort.)<br>**Ph : 2457011** |
| **பொறுப்பாசிரியர்** | : | **அ.நி. M. ராமசாமி**<br>**Ph : 2432564** |

## அறங்காவலர் குழு

**அ.செ. C. பழனிசாமி, Ph : 5536849** **அ.செ. K. சாவித்திரி, Ph : 2456743**

**அ.நி. S. இந்திராணி, Ph : 2422613** **அ.நி. P. மரகதம், Ph : 2453817**

**அ.நி. V.A. பழனிசாமி, Ph : 2426388**

## ஆயுள் கால உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. S.M. பன்னீர் செல்வம் | - Ph : 5539785 | 17. P. சண்முகம் | - Ph : 2435115 |
| 2. N.R. நாராயணசாமி | - Ph : 2432816 | 18. P. ராஜ்குமார் | - - |
| 3. P. இளங்கோ | - Ph : 2456429 | 19. S. கணேசன் | - Ph : 2456656 |
| 4. M. செண்பகவல்லி | - Ph : 2433456 | 20. R. மலர்விழி | - Ph : 245978 |
| 5. N. பால்ராஜ் | - Ph : 5523260 | 21. M. சரஸ்வதி சக்திவேல் | - Ph : 2445039 |
| 6. M. நாராயணன் | - - | 22. R. ராதாகிருஷ்ணன் | - Ph : 2435435 |
| 7. M. சோலை | - Ph : 2432806 | 23. S. பால்ராஜ் | - 95257230045 |
| 8. A. கனகராஜ் | - Ph : 2454867 | 24. N. பழனிசாமி | - - |
| 9. R. தன்னாசி | - Ph : 2432806 | 25. V. திருநாவுக்கரசு | - Ph : 2422613 |
| 10. S. மாணிக்கம் | - - | 26. R. சுரேந்திரன் | - 9842537979 |
| 11. P. அய்யாசாமி | - Ph : 2435515 | 27. C. கலைவாணி | - Ph : 2423118 |
| 12. S. விஜயன் | - Ph : 2422283 | 28. S. ராமசாமி | - Ph : 2431458 |
| 13. V. மதிவாணன் | - Ph : 2433236 | 29. வேதசுப்பையா | - Ph : 2451680 |
| 14. G. கலாராணி | - Ph : 2434295 | 30. K. துரைசாமி | - Ph : 2423636 |
| 15. N. சுந்தரம் | - Ph : 2454103 | 31. C.K. பெருமாள் | - Ph : 2217618 |
| 16. K. சுப்ரமணியன் | - Ph : 2457242 | 32. S. பழனிச்சாமி | - Ph : 2422461 |

## அறிவுத் திருக்கோயில் திறப்பு விழா அழைப்பிதழ்

பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை, ஆனந்தா நகர், கோவை - 41
போன் : 98427 81564 / 3218612 / 2456743 / 2432564

**இடம் : பா.நா. புதூர், ஆனந்தா நகர், கோவை - 41**
**நாள் : 16.9.2004 - வியாழக்கிழமை, காலை 9.30 மணி**

பேரன்பு கொண்ட அறிஞர் பெருமக்களே!

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் நோக்கம் உலக சமாதானம்.** அந்த நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, கோவை பா.நா. புதூர் அறிவுத்திருக்கோயில் வளாகத்தில் புதிய கட்டிடத் திறப்பு விழா, அருட்தந்தையின் அருளாசியால், பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக் கட்டளையின் தலைவர் அ.செ P. சீனிவாசன், M.A., அவர்கள் தலைமையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் **அருள்நிதி SKM. மயிலானந்தன்** அவர்களால் நிகழும் உலக சமாதானம் ஆண்டு 19 (தாரண ஆண்டு ஆவணி மாதம் 31ந் தேதி (16.09.2004) வியாழக்கிழமை காலை 9.30 மணி அளவில் திறந்து வைக்கப்பட உள்ளது. அது சமயம் தாங்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

**காலை 9.30**

| | |
|---|---|
| அறிவுத் திருக்கோயில் திறப்பு | : **அருள்நிதி SKM மயிலானந்தன்**<br>தலைவர், உலக சமுதாய சேவா சங்கம் |
| குத்துவிளக்கு ஏற்றுதல் | : **அருள்நிதி சரஸ்வதி செல்வராஜ்**<br>**அருள்செல்வி புண்ணியவதி சீனிவாசன்** |
| கல்வெட்டு திறப்பு | : **அருள்நிதி R. பச்சையப்பன்**, தலைவர்,<br>கோவை மண்டல ஒருங்கிணைப்பு குழு |
| இறைவணக்கம் | : **அருள்நிதி K. ஜோதிமணி**<br>**அருள்நிதி S. இந்திராணி** |
| துரிய தவம் | : **அருள்நிதி C.K. பெருமாள்** |
| வரவேற்புரை | : **அருள்நிதி டாக்டர் L. தேவராஜன்**<br>செயலர், பா.நா. புதூர் ஸ்கை அறக்கட்டளை |
| கருத்துரை | : **அருள்செல்வர் K. ரங்கநாதன்**<br>துணைத்தலைவர், பா.நா. புதூர் அறக்கட்டளை |
| முன்னிலை | : **அருள்நிதி R. பச்சையப்பன்**, தலைவர்,<br>**அருள்நிதி S. செல்வராஜ்**, செயலர்,<br>கோவை மண்டல ஒருங்கிணைப்பு குழு |



கணவன் மனைவி உறவு என்பது ஒரு இறைவன் இன்னொரு இறைவனுக்குத் தனது வாழ்நாள் முழுவதும் துணைநின்று அவனது இன்ப துன்பங்களில் சமபங்கு ஏற்று, உயிர் தூய்மை பெற்று, வாழ்வின் நோக்கமாகிய இறைநிலையை அடைவதற்குத் துணையாக வரும் உறவே. அருளன்னை லோகாம்பாள் அவர்களின் அன்பும் கருணையும், தியாகமும்தான் ஆசான் அவர்களை ஒரு ஞானியாக உலகுக்கு அளிக்க முடிந்தது. சமுதாய நல நோக்குடைய இந்த இணையற்ற தம்பதிகளின் வாழ்வின் சிறப்பே ஒவ்வொரு கணவனும் தனது மனைவியை மதித்துப் போற்ற வேண்டும் என்ற உலகநலக் கருத்தாக மாறியது. மனைவியின் மதிப்பை சமுதாயம் உணர வேண்டும் என்பதற்காகத்தான், பெற்றோர்கள் தினம், குழந்தைகள் தினம், சுமங்கலி பூஜை (கணவன் நல வேட்பு) என்றிருப்பதுபோல, மனைவி நல வேட்பு நாள் உருவாக்கப்பட்டது. சுமார் 20 ஆண்டு காலம் தன்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை, பிறந்தகத்தை, பிறந்த ஊரைப் பிரிந்து நம்மை நம்பி இல்லறம் ஆற்ற வந்த மனைவியை என்றென்றும் போற்றுதல் வேண்டும்; அவர்களின் பெருமையை ஒவ்வொரு கணவனும் உணர வேண்டுமென்று விரும்பிய அருட்தந்தை அவர்கள் அன்னை லோகாம்பாள் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் 30-ம் தேதியை மனைவி நல வேட்பு நாளாக (wife's appreation day) அறிவித்தார்கள்.

முதலாம் மனைவி நல வேட்பு விழா ஆகஸ்ட் 30ம் தேதி 1994ல் அருட்தந்தை பிறந்த ஊரான கூடுவாஞ்சேரியில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் அருட்தந்தை அவர்கள் தனது உயிரில் ஒன்றிக் கலந்துவிட்ட அருளன்னையின் இரக்கத்தையும், தியாகத்தையும் ஒரு கவிதை மூலம் நா தழுதழுக்க எடுத்துக் கூறி அருகே அமர்ந்திருந்த அன்னையை பூரிப்படையச் செய்தார்கள்.

"பெற்றோரைப் பிறந்தகத்தை பிறந்த ஊரைவிட்டு
பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற
பற்றற்ற துறவியெனக் குடும்பத் தொண்டேற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய் கொண்டென்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் அறம் ஆற்றும் மாண்புமிக்க என்றன்
மனைவியை நான் மதிக்கும் இந்நாள் வாழ்த்தி மகிழ்கின்றேன்"

# வாழ்க்கைத் துணையை வாழ்த்துவோம்!

மனதை விரித்து உலகம் முழுமையும் இணைத்துப் பார்த்தால் ஏறக்குறைய ஒரு பாதிபேர் பெண்கள்; மற்ற பாதி ஆண்களாக இருப்பர்; அந்த ஆண்கள் அனைவருமே பாதி எண்ணிக்கையிலுள்ள பெண்களால் பெறப்பட்ட குழந்தைகளேயாவர். ஆராய்ந்து பார்த்தால் எல்லா ஆண்களின் உடலிலும் ஓடிக் கொண்டிருப்பது பெண்ணின் ரத்தமே ஆகும். பெண் வயிற்றில் உருவாகி, பெண் பாலுண்டே வளர்ந்து பெண்களின் பெரும் துணையால்தான் ஆண் மக்கள் மட்டுமல்ல, எல்லா மக்களுடைய வாழ்க்கையும் நடைபெற்று வருகின்றது; அத்தகைய சிறப்புடையது பெண்ணினமாகும். சிந்தனை செய்து பார்த்தால் பெண்ணினம் ஆணினத்திற்குக் குறைவான மதிப்புடையதாகவோ, உயர்ந்த மதிப்புடையதாகவோ அல்லது சம மதிப்புடையதாகவோககூட எடுத்துக் கொள்ள முடியாது; இயற்கையெனும் இறையாற்றலின் கருணையினால் பெண்களுக்கு ஒரு சிறப்பிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. பெண்ணின் சிறப்பை மதித்து நடக்காத தனி மனிதனோ, சமுதாயமோ, நாடோ எந்த வகையிலும் அமைதியும் முன்னேற்றமும் அடைய முடியாது.

உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள மக்களின் பண்பாட்டை கூர்மையாகக் கண்காணித்தால் எல்லா நாடுகளிலும் ஆண் ஆதிக்கமும், காரணமில்லாத பெண்ணடிமையும் நிலவி வருவதை காணலாம். எந்த காலத்திலோ, எந்த இடத்திலோ உருவாகிய பெண்ணடிமையும், ஆணாதிக்கமும் உலகம் முழுவதும் பரவி இன்று அதுவே ஒரு பண்பாடாக அமைந்துள்ளது. கம்ப்யூட்டர் உபயோகிக்கும் விஞ்ஞான யுகத்தில் இருக்கும் நாம் இன்றாகிலும் நமது வாழ்க்கை பண்பாட்டில் உள்ள பெரும் களங்கமான பெண்ணடிமை, ஆணாதிக்கம் என்ற கருத்துக்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் தாயாக, உடன் பிறந்தவளாக, வாழ்க்கைத் துணைவியாக வாழ்வு அளித்துக் கொண்டு இருக்கக்கூடிய பெண்கள் தெய்வத்தின் தூதுவர்கள்தான் என்ற உண்மை மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஒன்றாகும். பிரபஞ்சத்தை உற்பத்தி செய்து காத்து வரும் இறைவன் உயிரினங்கள் தோற்றம், அவைகளின் காப்பு இவற்றை பெண்மையிடத்தே ஒப்புவித்திருக்கும் பேருண்மையை எல்லோரும் உணர வேண்டும். சமுதாயத்தில் பெண்களுக்குச் சமநீதி வழங்குவதை மனித பண்பாட்டில் முக்கியமான சீர்திருத்த கருத்தாக கொள்ள வேண்டியது சமுதாயநல நோக்குடைய அறிஞர்களின் கடமையாகும்.



| | | |
|---|---|---|
| தலைமை உரை | : | **அருள்செல்வர் P. சீனிவாசன்**, தலைவர்<br>பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை |
| மலர் வெளியிடுபவர் | : | **அருள்நிதி CKs. ஜெயக்குமரன்**<br>Wise-Trust, கோவை |
| மலர் பெற்றுக் கொள்பவர் | : | **Dr. M.V. ரபீந்திரநாத்**<br>வாசவி டிரஸ்ட், கோவை |
| விழாப் பேருரை | : | **அருள்நிதி SKM. மயிலானந்தன்**<br>தலைவர், உலக சமுதாய சேவா சங்கம் |
| வாழ்த்துரை | : | **தவத்திரு மருதாசல அடிகளார்**<br>இளையபட்டம், பேரூர் ஆதினம்<br>**திரு. M. சண்முகசுந்தரம்**<br>பேரூராட்சித் தலைவர், வடவள்ளி<br>**அருள்நிதி R. சோமசுந்தரம்**<br>மண்டல மேலாளர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (LPG), கோவை<br>**பேராசிரியர் வேதசுப்பையா**<br>**பேராசிரியர் P. பரமசிவம்**<br>**பேராசிரியர் Dr. K. பெருமாள்**<br>**பேராசிரியர் Dr. S. லட்சுமணன்**<br>**பேராசிரியர் R. பத்மாவதி** |
| நன்றியுரை | : | **அருள்நிதி S.M. பன்னீர் செல்வம்**<br>ஆயுள் உறுப்பினர் |
| உலகநல வாழ்த்து | : | **அருள்நிதி M. ராமசாமி**, பொறுப்பாசிரியர்,<br>**அருள்நிதி V.A. பழனிசாமி**, அறங்காவலர் |
| நிகழ்ச்சி தொகுப்பு | : | **அருட்செல்வி C. சுதா லட்சுமி,** TNAU, கோவை |

**சர்வவஸ்ய தனாஹர்சனா சங்கல்பம்**

16.09.2004 - வியாழக்கிழமை, காலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை நடத்துபவர்கள் :

அருள்நிதி **G. கணேசமூர்த்தி,** அருள்நிதி **K. ஜெயராமன்,** மற்றும் **மகளிர் குழு**

**பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை**

1. அறிவுத் திருக்கோயில், ஆனந்தா நகர்.
   (Phone : 98427 81564 / 3218612 / 2456743 / 2432564)
2. வடவள்ளி 'அருளகம்' தவமையம் (Phone : 2445979 / 2422613)
3. பெரியார் நகர் தவமையம், வடவள்ளி, கோவை. (Phone : 98944 - 45343)
4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பெண்கள் தவமையம்.
5. வீர கேரளம் பெண்கள் தவமையம், வீரகேரளம். (Phone : 2478545)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

# மலர்க் குழு

**மலர் ஆசிரியர் : அருள்நிதி Dr. L. தேவராஜன்,** M.Sc (Ag)., Ph.D.

# மலர் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| **பேராசிரியர்** | **வேதசுப்பையா** |
| **அருள்நிதி** | **C.K. பெருமாள்** |
| **அருள்நிதி** | **M. ராமசாமி** |
| **அருள்நிதி** | **S.M. பன்னீர் செல்வம்** |
| **அருள்நிதி** | **K. ஜோதிமணி** |
| **அருள்நிதி** | **K. ரங்கநாதன்** |
| **அருள்நிதி** | **P. சீனிவாசன்** |
| **அருள்நிதி** | **K. ஜெயராமன்** |
| **அருள்நிதி** | **V.A. பழனிச்சாமி** |
| **அருள்நிதி** | **G. கணேசமூர்த்தி** |
| **அருள்நிதி** | **S. ராஜசேகரன்** |
| **கவிஞர்** | **பொன்னாடு** |



# வேதாத்திரிய விருட்சம்

'மனவளக்கலை' என்ற மண்ணின் விதைகள் நாம்;
வேர்விட்டது 'வேதாத்திரி மகரிஷி' என்று 'வேதாத்திரியத்தில்';
முதல் இரண்டு முளைகள் விட்ட கிளைகள்தான்
'தனி மனித அமைதியும்' 'குடும்ப அமைதியும்'
'தனி மனித அமைதி' என்ற கிளை இலைவிட்டது
'உடற் பயிற்சி', 'தியானம்', 'காய கல்ப பயிற்சி' என்றாக;
'குடும்ப அமைதி' என்ற கிளை விட்ட இலைகளோ
சிந்தனை, சிக்கனம், சீர்திருத்தம்
பொறுமை, விட்டுக் கொடுத்தல், தியாகம்
உணர்தல், மதித்தல், பாராட்டுதல்;
இந்த இரு கிளைகளும் 'தற்சோதனை' என்ற
தண்டைப் பற்றி தங்களின் பார்வையை விரித்தன;
விரித்ததால் வந்த சுற்ற அமைதிதான் 'பணிவு, கனிவு, துணிவு'
என்ற நட்பு நலமாக மாறியது!
சமுதாய 'அமைதி' என்பது ஒழுக்கம், கடமை, ஈகை ஆயிற்று;
இவைகள் சொரிந்தன 'உலக அமைதி' என்ற மலர்களை;
அதனால் கனிந்தனவாம் இறைமை, முழுமை, நிறைமை!
இந்த அன்பின் கருணையால்
இன்று வேதாத்திரிய பழுமரத்தை நாடி
பல நாட்டுப் பறவைகளும் வந்து தங்கும்
வேடந்தாங்கல்தான் 'அருள்தந்தை'
வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

**அ.நி. கணா காளியம்மாள்**
வேளச்சேரி மனவளக்கலை மன்றம்
சென்னை - 42.







# நன்றி மலர்கள்

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனித குலமானது இறையுணர்வு பெற்று, அறநெறி வாழ்க்கை வாழ்வதற்கேற்ற வாழ்க்கைக் கல்வியை மனவளக்கலை என்ற பெயரில் வடிவமைத்துக் கொடுத்துள்ளார்கள். ஆழியாறில் ஓம்கார மண்டபமாக அமைக்கப்பட்ட அறிவுத் திருக்கோயிலைத் தொடர்ந்து, நாடெங்கும் பல இடங்களில் அறிவுத் திருக்கோவில்கள் அமைக்கப்பட்டு வருவதைப்போல, கோவையின் மேற்கில் மருதமலைப் பாதையில் பா.நா.புதூரில் அறிவுத் திருக்கோயில் அமைக்கப்பட்டு, அதன் திறப்பு விழா நடைபெறும் **16.09.2004**ம் நாள் பொன்னான நாளாகும்; இந்த நன்நாளில் மகரிஷி அவர்களின் மலரடிகளை வணங்குகிறோம்.

இச்சீர்மிகு விழாவிற்கு தலைமையேற்று நடத்தி தரும் அருட்செல்வர் P. சீனிவாசன், தலைவர், பா.நா.புதூர் ஆன்மீக அறக்கட்டளை அவர்களுக்கும், அறிவுத் திருக்கோயிலை திறந்து வைத்து விழாப் பேருரை வழங்குகின்ற உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் அருள்நிதி SKM. மயிலானந்தன் அவர்களுக்கும், விழா மலரை வெளியிடும் Wise Trust அருள்நிதி CKs. ஜெயக்குமரன் அவர்களுக்கும், மலரைப் பெற்று சிறப்பிக்கவுள்ள வாசவி அறக்கட்டளை அருள்நிதி Dr. M.V. ரவீந்திரநாத் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இச் சிறப்பு விழாவில் குத்துவிளக்கேற்றும் சரஸ்வதி செல்வராஜ், புண்ணியவதி சீனிவாசன், இறைவணக்கம் பாடும் K. ஜோதிமணி, S. இந்திராணி அவர்களுக்கும், துரிய தவம் நடத்தும் C.K. பெருமாள் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இம்மங்கள விழாவில் வரவேற்புரை வழங்கும் பா.நா.புதூர் அறக்கட்டளை செயலர் அருள்நிதி Dr. L. தேவராஜன் அவர்களுக்கும், கருத்துரை வழங்கவுள்ள உதவி தலைவர் அருட்செல்வர் K. ரங்கநாதன் அவர்களுக்கும், முன்னிலை வகிக்கும் கோவை மண்டல ஒருங்கிணைப்பு குழு தலைவர் அருள்நிதி R. பச்சையப்பன், செயலர் அருள்நிதி S. செல்வராஜ் அவர்களுக்கும் எங்களது நன்றியை உரித்தாக்குகிறோம். வாழ்த்துரை வழங்கும் பேரூர் ஆதினம் இளையபட்டம் தவத்திரு. மருதாசல அடிகளார், வடவள்ளி பேரூராட்சி தலைவர் M. சண்முக சுந்தரம், பாரத் பெட்ரோலிய மண்டல மேலாளர் R. சோமசுந்தரம், பேராசிரியர் வேதசுப்பையா, பேராசிரியர் P. பரமசிவம், பேராசிரியர் Dr. K. பெருமாள், பேராசிரியர் Dr. S. லட்சுமணன், பேராசிரியர் R. பத்மாவதி ஆகியோர்களுக்கும், நன்றியுரை வழங்க இருக்கும் அருள்நிதி S.M. பன்னீர் செல்வம் அவர்களுக்கும், உலகநல வாழ்த்து பாடவுள்ள பொறுப்பாசிரியர் M. ராமசாமி, அறங்காவலர் V.A. பழனிசாமி மற்றும் நிகழ்ச்சியை தொகுத்தளிக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அ.செ. C. சுதாலட்சுமி அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம். சிறப்பு விழாவன்று காலை சர்வ வஸ்ய தனாஹர்ஷண

சங்கல்பம் நடத்தும் பொருளாளர் G. கணேசமூர்த்தி, உதவி செயலர் K. ஜெயராமன் மற்றும் மகளிர் குழுவுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அறிவுத் திருக்கோயில் அமைந்துள்ள சுமார் 5 லட்சம் மதிப்புடைய இடத்தை நன்கொடையாக கொடுத்ததோடல்லாமல் அறிவுத் திருக்கோயில் கட்டிடப் பணியை எந்தவித தடங்கலுமின்றி கட்டி முடிக்கும் வரையில் உடனிருந்து மேற்பார்வை செய்த தலைவர். P. சீனிவாசன், நாள்தோறும் பல அன்பர்களை சந்தித்து கட்டிடப்பணிக்கு வேண்டிய நிதியை பெற்று கட்டிடப் பணி தொடர்ந்து நடைபெற்று நிறைவடைய உதவிய உதவி தலைவர் K. ரங்கநாதன், பொறுப்பாசிரியர் M. ராமசாமி, S.M. பன்னீர் செல்வம் மற்றும் K. ஜெயராமனுக்கு உளமார்ந்த நன்றிகள் உரித்தாக்குகிறோம். அறிவுத் திருக்கோயில் கட்டுமானப் பணிக்கு வேண்டிய தொழில்நுட்ப ஆலோசனைகளை ஆரம்ப காலத்திலிருந்து, நிறைவுறும் காலம் வரை கொடுத்த பொறியாளர்கள் Er. M. காளிதாஸ் மற்றும் Er. N. வில்லாளன் அவர்களுக்கும் உள்ளார்ந்த நன்றிகள் உரித்தாக்குகிறோம். அறிவுத் திருக்கோயில் கட்டிடப் பணியை தனது உதவியாளர்களுடன் செவ்வனே கட்டி நிறைவு செய்த திரு. ராமசந்திரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம். அறிவுத் திருக்கோயில் பணி சிறப்பாக நிறைவடைய பொருள் உதவியாலும், உடல் உழைப்பாலும், வாழ்த்து அலைகளாலும் உறுதுணை புரிந்த அனைத்து அருளுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் உரித்தாக்குகிறோம்.

திறப்பு விழா சிறப்பு மலருக்கு தங்களின் கருத்துக்களால் அணி செய்தவர்கள், விளம்பரங்கள் தந்து உதவிய நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டு அளித்த கோவை ஸ்ரீதேவி லித்தோ கிராபிக்ஸ் அச்சகம் திரு S. ராஜசேகரன் அவர்களுக்கும், மலரின் வெளியட்டையை சிறப்பாக வடிவமைத்த திரு S. தங்கபாண்டியன் அவர்களுக்கும், குறுகிய காலத்தில் சிறப்பாக மலரை செய்து கொடுத்த திருமதி D. ஜெயலக்ஷ்மி அவர்களுக்கும் உள்ளார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்பெரும் விழா சீரும் சிறப்போடும் நடைபெற உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், அறங்காவலர் குழுவிற்கும், விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிறைவாக சூக்குமமாக அனைவருக்குள்ளும் இணைந்தியங்கி அறிவுத் திருக்கோயில் திறப்பு விழா, விழா மலர் தயாரிப்பு, வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற துணையிருந்த அருட்தந்தை அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

வாழ்க வளமுடன்

தங்களன்புள்ள,
**அருள்நிதி. L. தேவராஜன்,**
ஆசிரியர், மலர்குழு.



அக்காலங்களில் உடலுறவு தவிர்ப்பதும், அறிவிற்கு ஏற்ற பயிற்சி அளிப்பதும், உணவில் ஒழுங்குமுறை கடைபிடிப்பதும் அவசியம். அமாவாசை, பௌர்ணமி நாட்களை புனித நாட்களாக மதித்து ஒழுகி நடப்பது சிறப்பு; வாழ்விற்கு வளமளிக்கும் சங்கற்பங்களை இறைவணக்க முடிவில் சொல்வது உயர்வைத் தரும்; உடல் நலம், நீள் ஆயுள், நிறை செல்வம், அறிவு, உயர்புகழ் ஒழுக்கம், அறம், கடமை இவற்றில் மென்மேலும் சிறப்படைவேன் என்று பலமுறை தனக்குத் தானே உறுதி கூறிக் கொள்வது வாழ்வைச் சிறப்பிக்க உயர்ந்த பயிற்சி ஆகும்.

ஐம்புலன்கள் மூலம் தனது ஆன்ம சக்தியை இழந்து சலிப்பும் துன்பமும் அடையும் மனிதன், இழந்த ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்ளவும், ஆன்ம சக்தியை முறைப்படுத்திக் கொள்ளவும், கட்டுப்படுத்திக் கொள்ளவும் தனக்கு மூலமான தெய்வ நிலையோடு தன்னை இணைத்துப் பழக்குவதே இறைவழிபாடு; இதனால் அறிவு கூர்மை பெறும்; அன்பு ஊறும்; ஒழுக்கம் ஓங்கும். இன்பம் பெருகும்; அமைதி கிட்டும்; வாழ்வு வளம் பெறும்; பிறவியின் நோக்கம் நிறைவேறும்.

தவநெறியும் அறநெறியும் பற்றப்பற்ற
தருக் கென்ற தன் முனைப்புக் குன்றிப் போகும்
பலவினைகள் புதிது எழா; முன்னம் செய்த
பதிவுகளும் மறைந்து மெய்ப் பொருளும் காணும்

**- மகரிஷி**

தொகுப்பு : **பேரா. R. பத்மாவதி,**
அன்னை தியான அறக்கட்டளை, கோவை.

---

# வேண்டுவது

தணிய வேண்டுவது சினம்! பணிய வேண்டுவது அகங்காரம்!
கனிய வேண்டுவது நல்அன்பு! துணிய வேண்டுவது புதுவாழ்வில்!
அணைய வேண்டுவது நற்பெரியோரை! முனைய வேண்டுவது நல்வாழ்வில்!
இனிமை வேண்டுவது என்வாக்கில்! வலிமை வேண்டுவது என் மனத்தில்!
எளிமை வேண்டுவது என் விருப்பில்! துவங்க வேண்டுவது மெய்ஞ்ஞானம்!
துறவு வேண்டுவது கடும் பற்றில்! உறவு வேண்டுவது கடைப்பொருளில்!
பற்ற வேண்டுவது குருவழி! ஏற்க வேண்டுவது அறநெறி வாழ்வு!
வாழ்த்த வேண்டுவது உலக அமைதிக்கு! மாற வேண்டுவது முழுமனிதனாக!

தொகுப்பு : **அ.நி. மு. ராமசாமி,**
பா.நா. புதூர், அறக்கட்டளை, கோவை - 41.

இறை வழிபாட்டிற்காக வாழ்வைத் தியாகம் செய்யத் தேவையே இல்லை; வயதிற்கும் அறிவு நிலைக்கும் ஏற்றவாறு இறை வழிபாடு அமைய வேண்டும். இறைநிலையை மகிழ்விக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் பொருட்களையும் காலத்தையும் வீணாக்குவது தவறு. குழந்தைகள் பக்திப்பாடல் மூலம் இறைவனை வணங்கலாம்; வயது வந்தவர்கள் இறைநிலை குறித்து ஆராய்ந்து வருவதும், புலன்களைக் கடந்து நின்று தியானத்தில் ஈடுபடுவதும் சிறப்பானது; இது உடல் நலம், மன வளம், பொருள் வளம் பெற்று மேலும் மேலும் வாழ்வில் தன்னை உணர்த்திக் கொள்வதற்குப் பயன்படுகிறது என்ற உணர்வோடு அமைய வேண்டும்.

அறநெறி, அகத்தவம், உண்மை உணர்வு என்ற இம் மூன்றும் மனிதனின் செயல்களையும் அறிவையும் செப்பனிட்டு தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றது. இவைகளை முறைப்படுத்த வழிகாட்ட அறிவில் சிறந்த தன்னலமற்ற குருவின் துணை அவசியம் வேண்டும். வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம் என்பதனை குரு மூலமாக உணர வேண்டும்; இந்த நான்கு வளங்களையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாது; இதனை உணர்த்த குருவின் வழிகாட்டல் அவசியம்.

உருவின்றி நின்று உருவாய் உணர்த்தும்
கருவின்றி நின்று தான் கருவாகும்
அவனன்றி நின்ற மாயத் தலைவனைக்
குருவின்றி யாரும் காட்ட முடியாதே!

\- **மகரிஷி**

மனம் என்பது அலை; இறை என்பது நிலை; அலையாகிய மனதை இறையாகிய நிலையில் நிறுத்திப் பழகுவதுதான் அகத்தவம். மனம் மனிதனுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் நிதி; ஒழுங்குபடுத்தினால் பேராற்றல் மிக்கது; பிரபஞ்ச அளவு விரிந்து நிற்கவும், அணு அளவு சுருங்கவும் மனதால் முடியும். அகத்தவம் மன அலைச் சூழலைக் குறைத்து இறைநிலையோடு இணைக்கிறது. இரவு முழுவதும் பூமியால் தடுக்கப்பட்ட சூரிய ஒளிச்சக்தி, சூரிய உதய காலத்தில் நேராக ஜீவன்களின் உடலில் பாய ஆரம்பிக்கின்றது. இது உடல் இயக்கத்தில் ஏற்படும் நல்ல திருப்பம்; ஆகவே காலை 4 மணிக்கு ஆன்ம சக்தியைக் கூட்டிக் கொள்ள இறைவழிபாடு அவசியமாகிறது; இது வாழ்வின் உயர்விற்கும், சிறப்பிற்கும் ஏற்ற நல்ல பழக்கமாக அமையும்.

அமாவாசை, பௌர்ணமி நாட்களில் நிலவு ஒளியின் ஏற்ற தாழ்வு நிலைகள் இரசாயன மாற்றம் பெற்று உச்ச கட்டத்தை அடைகின்றன;



*வாழ்க வையகம்!* *வாழ்க வளமுடன்!*

**YOGIRAJ VETHATHIRI MAHARISHI**

**Vethathiri Maharish Kundalini Yoga and Kayakalpa Research Foundation**
Arutperunjothi Nagar
Aliyar - 641 103.
Phone : 04253 - 288733, 288755

# வாழ்த்துரை

அன்புமிக்க ஆனந்தா நகர் பி.என்.புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை உறுப்பினர்களே! அறங்காவலர்களே! பேராசிரிய பெருமக்களே! பிரம்மஞானிகளே உங்கள் அனைவருக்கும் எனது உளம் பூரித்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

உங்கள் அறக்கட்டளையின் அறிவுத் திருக்கோயில் **16.09.2004** அன்று திறப்பு விழா நடத்த இருப்பது அறிந்து மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். அறிவறிந்து வாழும் மக்கள் எண்ணிக்கைக்கேற்ப உலக சமுதாயம் எல்லா வளங்களையும் பெற்றுத் திகழும். அத்தகைய பேற்றினை உலக சமுதாயம் அடைய வேண்டும் என்றால் இறை உணர்வைப் போதிக்கும் பேராசிரியர்களும், அறிவுத் திருக்கோயில்களும் உலகில் பெருக்கம் அடைய வேண்டும். இத்தகைய உயர்ந்த இலட்சியத்தை கடமையாகக் கொண்டு நீங்கள் அறிவுத் திருக்கோயில் ஒன்றைக் கட்டி உள்ளீர்கள். இத்தகைய பேரறச் செயல் உங்கள் அனைவரையும், உங்கள் குடும்பங்களையும், சமுதாயத்தில் உள்ள எண்ணிறந்த மக்களின் வாழ்க்கையைச் சீராக்கி, சிறப்பாக வாழ்வதற்கு ஆன்மீகப் பாதையை ஏற்படுத்திவிடும்.

இத்தகைய சமுதாய நல நோக்கம் கொண்டு வாழும் உங்கள் அனைவரையும் உங்கள் அறிவுத் திருக்கோயில் திறப்புவிழா நடைபெறும் இந்தப் பெருநாளில் வாழ்த்தி மகிழ்கிறேன். உங்கள் அன்பும் கருணையும் நிறைந்த இப்பேரற தொண்டு வருங்கால சமுதாயத்திலும் நீண்ட காலம் நலம் அளிக்கும் வளம் அளிக்கும். வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

உங்கள் அன்புள்ள
உலக நலத் தொண்டன்





**அருள்நிதி SKM. மயிலானந்தன்**
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்
180, காந்திஜி ரோடு,
ஈரோடு.

# வாழ்த்துரை

உலக மக்கள் அனைவரும் நல்ல உடல் நலமும், மனத் தூய்மையும், மன ஒருமைப்பாடும், உயர்ந்த பண்புகளையும் பெற்று உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும்.

மனிதகுலம் இறைஞானம் பெற்று, செயலுக்கு விளைவாக விளங்கும் இறை நீதியை மதித்து, போற்றி, அதன்வழி வாழ வேண்டும்.

உருவத்தால், பெயரால், இடத்தால் வேறுபட்டிருந்தாலும் ஆத்மாவால் நாம் அனைவரும் ஒன்று என்ற பேருண்மையை உணர்ந்து, பேதமின்றி, ஒருவருக்கொருவர் அன்போடும், கருணையோடும் ஒத்தும், உதவியும், நிறைவோடும் அமைதியோடும் வாழ வேண்டும். இதுவே தெய்வீக வாழ்க்கை.

பெரும்பாலும் கல்வியில் விடுபட்டுள்ள அறநெறி மற்றும் அகப்பண்பாட்டிற்கான ஆன்மீகக் கல்வியை, வாழ்க்கைக் கல்வியாக ஆசான் அருட்தந்தை அவர்கள் மனவளக்கலை என்ற பெயரில் வடிவமைத்துக் கொடுத்துள்ளார்கள். இக்கல்வியை, மக்களிடையே எவ்வித பேதமுமின்றி போதிப்பதற்காக, உலக சமுதாய சேவா சங்கத்தின் இணைப்புப் பெற்ற அறக்கட்டளைகள் செயல்பட்டு வருகின்றன.



# இறை வழிபாடு

உன்னிலே நான் அடங்க என்னுள்ளே நீ விளங்க உனது
தன்மை உணர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்

\- மகரிஷி

மனித இன வாழ்வு மதிப்பும் சிறப்பும் உடையது; ஏனெனில் மனிதனால் மட்டுமே, பிரபஞ்சம், இதில் இயங்கிக் கொண்டிருக்கும் சடப்பொருள், உயிர்ப் பொருள், பருவுடல், அறிவு. மனம், ஆன்மா அனைத்திற்கும் மூலமாகிய இறைநிலை ஆகியவைகளைப் பற்றி உணர்ந்து அனுபோகங்களாக மாற்றிக் கொள்ள இயலும். மனிதனிடமுள்ள கருமையத்தில்தான் பேரியக்க மண்டல இரகசியங்கள் அனைத்தும் அலை வடிவில் சுருங்கி உள்ளது. இவை அழியாதவைகளாகவும், புலன்களுக்கு எட்டாத மறை பொருட்களாகவும் உள்ளன. இறை ஆற்றல் என்னும் மூலப் பொருளே இப் பிரபஞ்சமாக மலர்ந்துள்ளது; ஆறாவது அறிவின் நிலையில் பண்பட்டவர்கள் பயிற்சியின் மூலம் இறைநிலையோடு தங்களை இணைத்துக் கொண்டு உண்மை நிலைகளை உணர முடியும்; பேரின்ப நிலையை தம்முடையதாக்கிக் கொள்ள இயலும்.

வாழ்வு சிறப்படைந்து வளம் பெற்று ஓங்க உடலுக்கும், உள்ளத்திற்கும், அறிவிற்கும் கிடைக்கும் ஒரு நல்ல பயிற்சி இறை வழிபாடு. நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் எங்கும் இறைந்து கிடப்பதால் தெய்வ நிலையை இறை எனக் குறிப்பிடுகிறோம். இறைவனின் ஆற்றலை உணர்ந்து, இறை நெறியைக் கைக்கொண்டு, இயற்கைக்கு முரண்பாடு இல்லாமல் செயலாற்றி வருவதே வழிபாடு எனப்படும். மனிதனுக்கு இறைநிலையை வேண்டி பெறவேண்டியது எதுவும் இல்லை; ஒரு ஜீவனுக்கு வேண்டிய அனைத்தும் அதன் பிறப்பிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

சர்வ வல்லமை பொருந்திய இறைநிலையை மகிழ்விக்க வேண்டும் என்று எண்ணுவது அறியாமை. இறைவனின் இயக்கம் உண்மை நெறி உடையது; அந்த நெறியை மதித்து, எண்ணம், சொல், செயல்களை ஒழுங்கு படுத்த வேண்டியது மனிதனின் கடமையாகும். முயற்சியும் ஒழுக்கமும் மனிதனை மேன்மைபடுத்தக் கூடியவை; ஒழுக்கத்தைக் காத்து முயற்சியை மேற்கொள்ள வேண்டும். மனித வாழ்வு எண்ணம், சொல், செயல் என்ற மூன்றில் அடக்கம். நோக்கம், திறமை, காலம், இடம் தொடர்பு கொள்ளும் பொருள் இவைகளுக்கு ஏற்ப இறை நிலையே இன்பமாக, துன்பமாக, பேரின்பமாக வருகிறது என்ற அடிப்படை விளக்கத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

**செலுத்த செய்வதுதான் காயகல்பப் பயிற்சி.** வித்துக் குழம்பிலுள்ள சத்துப் பொருட்கள், பதங்கமாகிற முறையில், உடல் செல்களில் பாய்ச்சப்பட்டு, உடலுறுப்புகளில் பதங்கமாகி சேருகின்றது.

காலையில் நின்று கொண்டு செய்யும் பயிற்சியின்போது மார்பு வரையிலும், வஜ்ராசனத்தில் அமர்ந்து செய்யும் பயிற்சியின் போது வயிற்றுப் பகுதி வரையிலும், படுத்துக் கொண்டு செய்யும் பயிற்சியின் போது உடல் முழுவதுமாக, அனைத்துச் செல்களிலும் விந்துச் சக்தி பரப்பப்படுகின்றது. மாலையில் செய்யும் பயிற்சியின்போது மெரிடியன் நரம்புகள் ஊக்குவிக்கப்படுகின்றன. முதல் நிலையில் உடலின் வலது பக்கத்திலும், இரண்டாவது நிலையில் உடலின் இடது பக்கத்திலும் ஆற்றல் பாய்ச்சப் படுகிறது. ஒவ்வொரு நிலையிலும், நுரையீரல்கள் ஒரே சமயத்தில் , உயர்ந்து தாழ்ந்தும், சுருங்கி விரிந்தும் செயல்படுகின்றது. இரவு உறங்குவதற்கு முன்பு, செய்யும் பயிற்சியானது இடையூறு இல்லாத உறக்கத்தினை கொடுத்து, உறக்கத்தின் போது உடற் செல்கள் நன்கு புதுப்பிக்கப்பட உதவுகின்றது.

பருவத்தால், தக்க வயது வரும் போது, விளைவதுதான் பாலுணர்வு; அதனை ஒழுக்கத்தோடு, சில கட்டுப்பாடுகளுடன், அனுபவிப்பதுதான் பகுத்தறிவு. தாம்பத்திய உறவுக்கு மறுநாள் உடல் சோர்வும், அன்றாட கடமைகளை செய்வதில் சலிப்பு மற்றும் துன்ப உணர்வுகளும் ஏற்படுமானால், அதிகப்படியான வித்துக் கழிவு மட்டுமல்லாமல் வித்துக் குழம்பின் இருப்பிலும் குறைவு ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்; மேலும், அவ்வாறு உணர்ந்த அனுபவத்தை மறவாமல் நினைவில் கொண்டு எச்சரிக்கையுடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

- மகரிஷி

தொகுப்பு : **பேரா. மாரியம்மாள் மோகன்தாஸ்**
பொள்ளாச்சி.

---

# பாலும் கள்ளும்

பசும்பாலை வீடு தோறும் சென்று விலை கூறி விற்க வேண்டும்; ஆனால் கள்ளோ இருந்த இடத்தில் இருந்து கொண்டே விலை போகும். அது போல, சான்றோரின் அறிவு விலை போவது கடினம்; தீயவரின் பொய் நடிப்பைக் கண்டு எல்லோரும் வேகமாக அவரை நாடி வந்து விரும்பி தீமையுற்று அழிவார்கள்.

புலவர் **ம. சாமிநாதன்**
வடவள்ளி, கோவை-41.



பா.நா.புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை இத்தகைய ஆன்மீக வாழ்க்கைக் கல்வியை மக்களுக்கு போதிப்பதற்காக அறிவுத் திருக்கோவிலை மிகச் சிறப்பாக நிறுவியிருக்கிறார்கள்.

அறிவுத் திருக்கோவில் திறப்பு விழா காணும் பா.நா.புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர், அறங்காவலர்கள் மற்றும் இதற்காக பொருள் உதவி செய்தவர்கள், தொண்டாற்றிய அன்பர்கள் அனைவரையும் அருட்தந்தை அவர்களின் அருளாசிகளோடு நானும் வாழ்த்தி மகிழ்கிறேன். தொடர்ந்து அருட்பணி சிறக்க அனைவரும் இணைந்து, அருட்தொண்டாற்ற அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ்கேஎம். மயிலானந்தன்,**
தலைவர்
உலக சமுதாய சேவா சங்கம்

**அ.நி. T.N. அருளானந்தன்**
மனவளக்கலை பேராசிரியர்,
பொது செயலாளர், உலக சமுதாய சேவா சங்கம்,
திருவான்மியூர், சென்னை.

# வாழ்த்துரை

பேரன்புடையீர்,

அன்பே வடிவான நமது அருட்தந்தை அவர்கள் கூற்றுப்படி, அருள் வளமும் பொருள் வளமும் அமையப் பெற்றது கோவை மாவட்டம்; குறிப்பாக கோவை நகரம். அருட்தந்தை அவர்கள் தற்போது தங்கி அருட்பணியாற்றி வரும் ஆழியாறு அறிவுத் திருக்கோயிலை முன்னோடியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள தங்களது அறக்கட்டளையின் அறிவுத் திருக்கோயில் பல்லாயிரம் அன்பர்களுக்கு வாழ்க்கைக் கல்வியான மனவளக் கலையைக் கற்பித்து அருளொளி வழங்கும் பல்கலைக் கழகமாக திகழ இறையருளும் நமது குருவருளும் துணை புரியுமாக என உளமார வாழ்த்துகிறேன். விழா மலர் மிக பயனுள்ள செய்திகளை மக்களுக்கு அளித்து பலரும் அறிவிலே தெளிவு பெற உதவும் என உளமார நம்புகிறேன்.

நமது தலைவர் அவர்கள் அடிக்கடி நினைவூட்டுவதுபோல், அறிவுத் திருக்கோயில் அமைப்பதற்கு எவ்வளவு ஆர்வத்துடன் அன்பர்கள் பலர் உடல் உழைப்பு, பொருள் மற்றும் அறிவாற்றலை நல்கினார்களோ, இதே ஆர்வத்துடன் அறிவுத் திருக்கோயிலின் செயல்பாட்டிற்கும் உதவி, மேன்மேலும் வளர்ச்சிப் பணிகள் சிறந்தோங்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொண்டு வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்

நன்றி. வாழ்க வளமுடன்!

தங்களன்புள்ள

**த.ந. அருளானந்தன்**



# காயகல்ப பயிற்சி

மனிதனை 120 அண்டுகள் வாழ வைக்கும் ஆன்மீக உடற்பயிற்சியே காயகல்ப பயிற்சி. பூமியானது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருவது போல, உயிர்த் துகள்கள் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு , உடல் முழுவதும் சுற்றி வருகின்றன; உயிர்த் துகள்கள் வித்துக் குழம்பில் திணிவு மிக்கதாக உள்ளன. பூமியின் சுழற்சியால் கனத்த பொருட்கள் எல்லாம் பூமியின் மையம் நோக்கி இழுக்கப்படுகின்ற விதியின்படி, மலம் மற்றும் மூத்திரப் பைகளில் சேருகின்ற கழிவுகள் மனிதனின் ஒத்துழைப்போடு வெளியேறுகின்றன; ஆனால் வித்துக் குழம்பானது (sexual vital fluid) நீர்த்த நிலையடைந்து மனிதனின் முயற்சி இல்லாதபோதும்கூட வெளியேறுகிறது. வித்து நீர்த்தால் வெளியேறும் தன்மை அதிகமாகிறது; வித்து அழுத்தம் பெற்றால் அளவும் கூடிவிடும்.

மிருதங்கத்தில் "டாண் டாண்" என்ற சப்தம் வராமல், "விண் விண்" என்ற சப்தம் வந்தால் மிருதங்கத்தைத் திருப்பிப் போட்டு, இருபக்கமும் அதனைச் சுற்றி கட்டையால் அடித்து இறுக்கி வைப்பார்கள்; இதுபோல, பூமியின் சுழற்சியால் ஏற்படும் உயிர்த் துகள்களின் விலகளினால் தளர்ச்சியுறும் நரம்புகளை தினசரி ஊக்கப்படுத்தும் பயிற்சிதான் நரம்பூக்கப் பயிற்சி. ஆக்ஸிஜன், வித்து, உயிர்சக்தி ஆகிய மூன்றையும் சிரசிற்கு ஏற்றுவதற்கு உதவுவது தான் ஓஜஸ் என்ற மூச்சு பயிற்சி; மேற்கூறிய மூன்றும் வைட்டமின்களாகவும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் மாற்றம் பெற்று உடல் நலத்தை காக்கின்றது. காயகல்பப் பயிற்சியின் போது வித்து சக்தியானது அதிகப்படுத்தப்பட்டு, ஓஜஸ் மூச்சு மூலம், சிரசிற்கு ஏற்றப்படுவதால், தினசரி உடலிலிருந்து உயிர் பிரியும் வேகமானது கட்டுப்படுத்தப்பட்டு ஆயுள் நீடிக்கப்படுகிறது.

உயிர்த் துகள்களின் எண்ணிக்கைக்கும், அவைகளின் சுழல் விரைவிற்கும் ஏற்ப ஜுவகாந்த சக்தியின் அளவும், அழுத்தமும் இருக்கும். தண்ணீரைச் சுழற்றி விட்டால் மையப் பகுதி அழுத்தம் பெற்று , மையத்தில் பள்ளம் விழுவது போல, உடலின் மையத்தில் ஜீவகாந்த திணிவு மையம் ஏற்படுகின்றது; அதுதான் ஆன்மா என்று சொல்லப்படுகின்ற கருமையம். உடலுக்கு மூலப்பொருளான வித்து, உயிருக்கு மூலப்பொருளான உயிர்த் துகள்கள், மனதுக்கு மூலப்பொருளான ஜீவகாந்தம் ஆகிய மூன்றும் மையம் கொண்டுள்ள இடம்தான் கருமையம்; காயகல்பப் பயிற்சியினால் கருமையம் தூய்மையாக்கப்படுகிறது. ஜீவகாந்த சக்தியைப் பொருத்துத்தான் உடல் நலம் மற்றும் மன வளம் அமையும். **கழிவுப் பொருளாக வெளியேற உள்ள வித்துக் குழம்பை, மீண்டும் செலுத்துதல் என்ற முறையில், உடலில்**

**அரசியலை ஏற்றுக் கொள்ளும் போது 'நானோ, என் சார்பில் எனது சொந்தக்காரர்களோ, நண்பர்களோ எவரிடமிருந்தும் லஞ்சம் வாங்க மாட்டோம்' என்ற உறுதிமொழி வாங்கப்படுவதுபோல பொதுமக்கள் சேவைக்கு வரக்கூடிய அனைவரிடமிருந்தும் உறுதிமொழி வாங்கப்படல் வேண்டும்**. இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவது கடினமாகத் தோன்றலாம் ஆனால் தீர்க்க முடியாத நோய்க்கு அறுவை சிகிச்சை எவ்வாறு இன்றியமையாததோ, அதே போன்றுதான் சமுதாய வளம் காக்க, சில பல கடுமையான திட்டங்களைச் செயல் படுத்த வேண்டியது அவசியமாகின்றது. பொருளாதாரத் துறையில் சமநீதியினை நிலைக்கச் செய்ய வேண்டியது அறிஞர்களது கடமையாகும். வாழ்க வளமுடன்

தொகுப்பு : **அ.செ. P. சீனிவாசன்,** நிரிவாக அறங்காவலர்,
பா.நா. புதூர் அறக்கட்டளை, கோவை.

---

## நினைவு நல்லது வேண்டும்!
## அறிந்து வாழும் நினைவு வேண்டும்!

அன்பாயிருக்க நினை! அடக்கமாயிருக்க நினை!
அறிந்து கொள்ள நினை! அறிவாயிருக்க நினை!
அதிகாரம் செய்யாதிருக்க நினை! அடிமை அகல நினை!
அகந்தையை அழிக்க நினை! அனுபவமாக்க நினை!
அமைதியாயிருக்க நினை! அறமாயிருக்க நினை!
அர்த்தத்தோடு வாழ நினை! அந்த அறிவே தெய்வமாகும்!
அது அனைவருக்கும் அரணாக அமைய வாழ்த்து!

**அ.செ. கே. ரங்கநாதன்**
உதவி தலைவர்,
பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை

---

*With Best Compliments from :*

***Viswakarma Designers***

9, Cross Cut Road, Gandhipuram
Coimbatore - 641 012. Phone : 2234472





# BRAIN TRUST

**Dr. G. Alagar Ramanujam**
Secretary General

---

## வாழ்த்து

*மூலத்தை உணர்ந்து, ஞாலத்தை அறிந்து, அனைவரும் வாழ்க்கை நலம் காத்து, உலகம் உய்வதற்கான ஞானவெளிச்சமும் சத்திய பாதையும் இணைந்தது வேதாத்திரியம். உடல், உயிர், மனம், கருமையம் என அனைத்தின் உறுதிக்கும் உத்திரவாதம் தருகிற வேதாத்திரிய பயிற்சி முறைகளை பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடமே அறிவுத்திருக்கோயில்; இது வள்ளலார் விரும்பிய சத்திய ஞானசபை.*

*பா.நா. புதூர் ஸ்கை அறக்கட்டளை அமைத்திருக்கும் அறிவுத் திருக்கோயில், அங்கு வாழ் மக்களின் மேம்பாட்டிற்கான, ஒரு சிறந்த படிநிலையாகும் என்பதில் ஐயமில்லை.*

*எங்கும் இறையருள் ஓங்கவும், எல்லோரும் இனிதே வாழவும் இந்த அறக்கட்டளையின் அன்பர்கள் பணி மென்மேலும் வளர்க; மகரிஷியின் வாக்கும் வாழ்வும் நமக்கு என்றென்றும் துணைபுரிக.*

*வாழ்க வளமுடன்!*

*அன்புடன்*
**கோ. அழகர் ராமானுஜம்**

*வாழ்க வையகம்!* *வாழ்க வளமுடன்!*

**R.P. Group** **R. Pachiappan**
Chairman

# குரு வாழ்க! குருவே துணை!

*அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனிமனித வாழ்வு வளம் பெறவும், அதன் மூலமாக சமுதாய வாழ்வு நலம் பெறவும், பலவித உடல் மன பயிற்சிகளை மக்களுக்கு அளித்துதவும் அருட்பணிக்காக, அறிவுத்திருக்கோயில் அமைத்து அதன் மூலமாக மனவளக்கலை பயிற்சிகளை மக்களுக்கு அளித்து வருகிறார்கள். அறிவுத் திருக்கோயில்கள் அனைத்தும், மகரிஷி அவர்களால் நிறுவப்பட்ட, உலக சமுதாய சேவா சங்க அமைப்பின் மூலம் செயல்பட்டு வருகின்றன.*

*உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் திரு SKM. மயிலானந்தன் அவர்கள் மகரிஷியின் மனவளக்கலை பயிற்சிகள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பஞ்சாயத்துக்கள், நகரங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழிற் கூடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் சொல்லித்தரப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றார்.*

*இத்தருணத்தில் தாங்கள் பா.நா.புதூர் அறக்கட்டளை மூலமாக அறிவுத் திருக்கோயில் கட்டி தங்கள் பகுதி மக்களின் வாழ்வு வளம் பெற முயற்சி எடுத்தமைக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். இந்த அறிவுத் திருக்கோயில் கட்டுவதற்கு உதவிய அறங்காவலர்களுக்கும், அனைத்து அருள்நிதியர்களுக்கும் மற்றும் பல வகையிலும் உதவி புரிந்த அனைத்து தரப்பு நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*வாழ்க வளமுடன்!*

**R. பச்சையப்பன்**
தலைவர், கோவை மண்டலம்
உலக சமுதாய சேவா சங்கம்



# பொருள் துறையில் சமநீதி

பொருள் துறையில் பணம் என்பது உழைப்பின் அடையாளமாகும் (Token of labour is money). இயற்கைவளம் அனைவருக்கும் எளிதாக கிடைக்கும் வகையில் இருக்கிறது. உழைப்பின் பலனாகக் கிடைக்கின்ற பொருட்களையும், செல்வத்தையும் மக்கள் தங்களுக்குள் பகிர்ந்து அனுபவித்து வாழ வேண்டும். ஆனால் ஆதிகாலந்தொட்டு பறித்துண்ணல் என்கின்ற முறை, விலங்கினத்தின் வித்தின்மூலம் மரபுவழித் தொடராக, சமுதாயத்தில் இன்றுவரை தொடர்ந்து வந்து, அதுவே பழக்கமாகவும் ஆகிவிட்டது. உலக மக்கட்தொகை அதிகரித்துக் கொண்டே போகும்போது, இன்றைய நிலைக்கு அவைகள் பொருந்தாது. பொருள் துறையில் அனைவருக்கும் சமமான நீதி வேண்டும்.

பழைய நாட்களில் உழைப்பாளர்களுக்கு ஊதியம் கொடுக்கும்போது, ஒரு நபருடைய உழைப்பின் ஊதியம் இரண்டு நபர்களுக்கு வாழப் போதுமான அளவில் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். இக்காலத்தில், உழைக்கத் தெரியாத, உழைக்க முடியாத மக்கள் அனைவருமே சமுதாயத்தில் நலமுடன் வாழ, அவர்களுக்கென நல்லதோர் ஏற்பாட்டினை செய்திடல் வேண்டும். நிலத்துக்கடியில் விளையும் கனிமங்கள், உலோகங்கள் மற்றும் விலை மதிக்கத்தக்க பொருட்கள் அனைத்தும் சமுதாயப் பொதுநிதியாக (Social Security Fund) வைக்க ஏற்பாடு செய்திடல் வேண்டும். மேலும் இந்த நிதியின் மூலம் குழந்தைகள், உடல் ஊனம் உற்றோர்கள் மற்றும் முதியோர்களின் வாழ்க்கைக்கு சிறந்தவழி செய்திடல் வேண்டும்.

ஒரு தனி மனிதனுடைய வருவாய் இன்னொருவரால் உறிஞ்சப்படாமல் பாதுகாத்தல் வேண்டும். இத்தகைய கேடு நிலவுவதற்கு மூலதன உரிமைதான் காரணமாக அமைந்துள்ளது. ஒரு தனி மனிதனுக்குப் பத்து வீடுகள் உரிமையாக இருக்கின்றன; அவருக்கு தேவையோ ஒரே ஒரு வீடுதான்; மற்ற வீடுகளை அவர் வாடகைக்கு விடுகிறார். வாடகை கொடுத்து வீட்டில் வசிப்பவர்கள் ஏழைகளாக இருப்பவர்கள்; வாடகை வாங்குபவர் ஏற்கனவே செல்வத்தில் மிகுந்தவர். இதுபோன்று உழைக்காமலேயே பிறரிடமிருந்து பொருள் பறிப்பதற்குரிய கருவியாக மூலதனம் அமைகிறது.இம்மாதிரி **மூலதனத்தைக் கொண்டு பிறரது பொருளைச் சுரண்டுகின்ற பொருளாதார நீதி மாற்றப்படுதல் வேண்டும்.**

மேலும் சமுதாய வாழ்வில், லஞ்சம் என்ற விஷம் இப்போது அதிகரித்துக் கொண்டே போகின்றது. **லஞ்சம் என்ற பழக்கம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டியது அவசியம். மனித வாழ்வின் வளத்தை வழக்கம் என்ற பெயராலும், அதிகாரம் என்ற பெயராலும்,மற்றொருவர் பறித்து வாழுகின்ற கொடுமை நீடிக்கக் கூடாது. ஒருவர் பொறுப்புள்ள**

நிலம் என்னும் ஐந்து பௌதிகப் பிரிவுகளும், அணுக்களின் கூட்டமாகிய நட்சத்திரங்கள் மற்றும் கோள்களும், பூமி என்னும் கோளில் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து, மறையும் தோற்றங்களாகிய தாவரம், புழு, பூச்சி, ஊர்வன, கால்நடைகள் மற்றும் மனித இனம் அனைத்தும் இயற்கைதான். அனைத்து தோற்றங்களிலும் இயக்க ஆற்றலாகவும், எல்லாவற்றிலும், எங்கும் இயக்க நியதி என்னும் பேரறிவாகவும் இருப்பதுதான் தெய்வம். இதை சிந்தித்து உணர்பவர்கள் இயற்கையே தெய்வம் என்பதை ஒப்புக் கொள்வர்.

**-மகரிஷி**

தொகுப்பு : **பேராசிரியர். வேதசுப்பையா,**
கோவை - 641 007.


*வாழ்க வளமுடன் என வாழ்த்தும்*

**கிரியாஸ்**

**THE CONSUMER DURABLE PEOPLE**

**7 உலகத்தரம் வாய்ந்த ஷோ ரூம்கள்**

446-448, கிராஸ்கட் ரோடு, பவர் ஹவுஸ் அருகில், கோவை - 641 012.
போன் 2236487, 2231675

இராஜராஜேஸ்வரி டவர், டவுன்பஸ் நிலையம் எதிரில், காந்திபுரம்,
கோவை - 12. போன் 2233059

T.V., மிக்ஸி, வாஷிங் மெஷின், ப்ரிட்ஜ், ஓவன் உட்பட அனைத்து
வீட்டு உபயோகப் பொருட்களும் ரொக்கத் தள்ளுபடி விலையில் பெறலாம்.
0% பைனான்சிலும் பெறலாம்.

- **உடனடி நிதியுதவி 0% வட்டி**
- **உடனடியாக மாற்றித்தரும் வசதி**
- **கிரெடிட் கார்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.**




*வாழ்க வையகம்!* *வாழ்க வளமுடன்!*

## மனவளக்கலை மன்ற அறக்கட்டளைகளின் கோவை மண்டல ஒருங்கிணைப்புக் குழு

06.09.2004

# வாழ்த்துரை

கடந்த ***09.04.2004*** அன்று அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்ட கட்டிடம், ***16.09.2004***-ம் தேதி திறப்புவிழா காண்பதை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நல்ல முறையில் அறிவுத் திருக்கோயில் உருவாக, இடம் கொடுத்து, பொருள் கொடுத்து, பணம் கொடுத்த, உழைப்பை கொடுத்த, சிந்தனையைக் கொடுத்த, வாழ்த்தைக் கொடுத்த அத்தனை மெய்யன்பர்களுக்கும், அவரவர்கள் எந்தெந்த நிலையில் இருந்து இந்த அறிவுத் திருக்கோயில் அமைய காரணமாக இருந்தார்களோ, அந்தந்த நிலைக்கேற்றவாறு அந்தந்த அளவிலே அருட்பேராற்றலின் அன்பும் கருணையும் ஈகையும், காலத்தால் அவரவர்களுக்கு கிடைக்க அடியேன் வாழ்த்துகிறோம்.

இந்த அறிவுத் திருக்கோயில், பூவுலகெங்கிலும் உள்ள மனித குலம் உய்ய, வேதாத்திரியப் பயணத்தில் ஒரு மைல் கல்லாகும். இந்த அறிவுத் திருக்கோயில், ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி, மூங்கில் போல் தூரெடுத்து வாழையடி வாழையாக வளர்ந்து, வேதாத்திரிய கருத்துக்களை பரப்புவதன் மூலம் உலகெங்கிலும் பல அறிவுத் திருக்கோயில்கள் அமைய காரணமாக விளங்கட்டும்.

கோவை பா.நா. புதூர் ஆன்மீக அறக்கட்டளையின் அறிவுத் திருக்கோயில் திறப்பு விழாவும், விழா மலர் வெளியிடும் விழாவும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம். இந்த அறிவுத் திருக்கோயில், அருட்தொண்டின் மூலம், உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களும் இறையுணர்வு பெற்று அற நிலையில் நின்று வாழ இறையருளும் குருவருளும் துணை நிற்கட்டும் என வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு
**S. செல்வராஜ்**
கோவை மண்டலச் செயலாளர்
உலக சமுதா சேவா சங்கம

# வாழ்த்து மடல்

கோவை பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை அறிவுத் திருக்கோயில் திறப்பு விழாவின் போது ஆசான் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் சிந்தனைகளை அறிவுக்கு விருந்தாக அளிக்கும் விழாமலர் வெளியிட இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று உலக மக்கள் வாழ்க்கையில் துன்பங்களுக்குக் காரணம் அறிவு வறுமைதான் என்பதை அருட்தந்தை மகரிஷி அவர்கள் உணர்த்தி வருகிறார்கள். அறிவு வறுமை நீங்கினால் பொருள் வளமும், நட்பு நலமும் ஓங்கி மனிதன் வாழ்வாங்கு வாழலாம். அறிவு வளமையைப் பெருக்கும் பயிற்சிக் கூடமாக விளங்க இருக்கும் அறிவுத் திருக்கோயில் திறப்பு விழாவின் சமயம் வாழ்க்கைத் துறைகளில் உள்ள சிக்கல்களைப் போக்கவல்ல சிந்தனைகளை விழா மலர் மூலம் வெளியிடும் அறிவுத் திருக்கோயில் அறங்காவலர்கள் மற்றும் அருட்தொண்டர்களின் உழைப்பை மதித்து பாராட்டி மகிழ்கிறோம்.

"விளக்கம் சிந்தனையைத் தூண்டும்; சிந்தனையில் தெளிவு பிறக்கும்; தெளிவு விளக்கத்தின் வழிவாழும் துணிவை கொடுக்கும்" என்பது மகரிஷி அவர்களின் கூற்று. விழா மலரின் மணம் வீசும் விளக்கங்கள் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டி, விளக்கத்தின் வழி வாழும் மன வலிமையை ஏற்படுத்தும் என்பது திண்ணம். அன்பர்கள் அனைவரும் விழா மலரைப் படித்து, பண்பட்டு உடல் நலமும், மன வளமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்துய்ய வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கிறோம்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

அருட்தந்தை வழியில்
உலக நலத் தொண்டன்
**வேதசுப்பையா**



# தெய்வத்தின் மறுபெயர் இயற்கை

மனிதகுல வாழ்க்கையில், தெய்வம் என்ற கருத்து சம்பந்தப்பட்டிருப்பதை அறிவோம். ஆனால் தெய்வம் ஒன்றா? பலவா? என்ற கேள்வியை எழுப்பி தெளிவு பெறாமலேயே தெய்வம் ஒன்றுதான்; அது அங்கெங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமர நிறைந்தது! அது தூணிலும், துரும்பிலும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். மேலும். தெய்வத்தை எப்படி வேண்டுமானாலும் வணங்கலாம் என்றும் சொல்லுகின்றனர்; தெய்வம் எல்லாவற்றிலும் இருப்பதால், மனிதன் எதை வணங்கினாலும் தெய்வத்தைத்தான் வணங்குவதாகும் என்றும் கூறுகின்றனர். பலர் இந்த தெய்வம் சக்தி வாய்ந்தது; அந்த தெய்வத்திற்கு சக்தி குறைந்துவிட்டது; அங்கே சென்றால் தெய்வ அருள் கிடைக்கும் என்று தெய்வ வணக்கத்திற்காக பல இடங்களை நாடிச் செல்கிறார்கள்; எங்கும் நிறைந்த தெய்வத்தை வணங்க பல வழிபாட்டுக் கூடங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் வழிபாட்டுக் கூடத்திற்கு சென்றுதான் தெய்வத்தை வணங்க வேண்டுமா என்பதும் கேள்வியாக இருக்கிறது. மேலும் சிலர் தெய்வத்தை இப்படித்தான் வணங்க வேண்டும் என்கின்றனர்; வேறு சிலரோ எப்படியும் வணங்கலாம் என்றும் கூறுகின்றனர். பல நேரங்களில் தெய்வத்தை வணங்குகிறவர்கள் எல்லாம் சுகமாக வாழவில்லை என்பதையும் தெய்வத்தை வணங்காமல் வாழ்கிறவர்களெல்லாம் சுகமாக வாழ்வதையும் காண்கிறோம். சிலர் தெய்வம் எல்லாவற்றையும், எல்லோரையும் காக்கும் என்றும் சொல்கிறார்கள்; ஒரு சிலர் நல்லவர்களை மட்டும் காத்து, தீயவர்களை அழிக்கும் என்றும் கூறுகின்றனர். தெய்வத்தை நம்பி வணங்குகிறவர்கள் தங்களது துன்பம் தீராதபோது, தெய்வம் தமக்கு அருள்புரியும் நேரம் இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள். தெய்வத்தைப் பற்றிய தெளிவான அறிவு இல்லாததாலும், தெய்வத்தை நாம் ஏன் வணங்க வேண்டும்? தெய்வத்தை எப்படி வணங்க வேண்டும் என்ற தெளிவான அறிவு இல்லாததாலும் மனித குலம் அல்லலுற்றுக் கொண்டிருப்பதை பார்க்கிறோம்.

தெய்வம் என்பது மனித ஆற்றலுக்கும், மனித அறிவுக்கும் மேலான ஆற்றலாகவும், அறிவாகவும் விளங்குவதாகும். அணுக்கள் தோன்றுவதும், கூடுவதும் கூடி இயங்குவதும் அவைகளின் இயக்கத்திற்கேற்ப விளைவை கொடுப்பதும், அழிவதும் இயற்கை எனப்படுகிறது. விண், காற்று, கனல், நீர்,

"இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்கவிட்டு
ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்
நித்தம் நித்தம் உடலில் உயிர் இயங்குமட்டும்
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக் கொள்ள
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்
கறை நீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்
கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்" **- மகரிஷி**

இந்த ஜீவ பிரம்ம ஐக்கிய இணைப்பில்தான் பிரபஞ்சத்தின் மூலப் பொருளை உணரும் அனுபவம் ஜீவனுக்கு ஏற்படுகின்றது; இந்த உணர்வின் விளைவைதான் புத்தரிடத்தில் தம்மபதமாகவும், ஏசுபிரானிடம் பைபிளாகவும். நபிகளிடம் திருக்குரானாகவும் வேதாத்திரி மகரிஷியிடம் வேதாத்திரியமாகவும் நாம் பார்க்கிறோம்; இதனையே கல்லாத கல்வி என்றார் கம்பர்; ஓதாது உணர்வது என்றார் மகரிஷி.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற வள்ளுவத்தை நினைவு கூர்வோம். அறிவை அறிவால் அறிவதே சத்தியவாழ்க்கை! இந்த சத்தியத்தை சாத்தியமாக்குகிற நிலையமே அறிவுத் திருக்கோவில்.

**டாக்டர். அழகர் ராமானுஜம்**
அறிஞர் குழு, ஆழியாறு.

---

# சந்தனமும் மூங்கிலும்

மூங்கில்கள் தாம் ஒன்றோடு ஒன்று உரசித் தீயை உண்டாக்கி, அருகில் உள்ள சந்தன மரங்களைக் கொளுத்தினாலும், அவைகளின் மணம் காடு முழுவதும் வீசிக் கொண்டிருக்கும்; மலர் விரிய விரிய மணம் பரப்புவதைப்போல, மதி எழ எழ ஒளி எழுவதைப்போல, சந்தனம் மணந்து கொண்டே இருக்கும். ஆனால் தீயிற்க்குக் காரணமான மூங்கில் புதர் பிறருக்கு ஒரு பயனும் கொடுக்காமல் தானே அழிகின்றது. அதுபோல நல்லோரைக் கெடுக்க முனையும் தீயோர், அந்நினைவால் தாமே அழிந்து போவாரேயன்றி அவர்கள் தரும் துயரால் நல்லோர்கள் ஒரு பொழுதும் கெட்டுவிடமாட்டார்கள்.

புலவர் **ம. சாமிநாதன்**
வடவள்ளி, கோவை-41.



**R. சோமசுந்தரம்** மண்டல மேலாளர்
பாரத் பெட்ரோலியம் (LPG), கோவை

---

# வாழ்த்துரை

உயிரினங்களில் உயர்ந்தவன் மனிதன், உலகங்களில் உயர்ந்தது நமது மண்ணுலகம்; மனிதனை விட உயர்ந்த ஒரு கடவுளை நம்மால் கற்பனை செய்ய இயலாது. ஒவ்வொரு மனிதனிடமும் எல்லாம் வல்ல பரம்பொருள் குடிகொண்டுள்ளது என்பதை உணராமல், உயிரின் மதிப்பையும் பிறவியின் நோக்கத்தையும் அறிவின் பெருமையையும் உணராமல், தன்னுள் இருக்கும் பரம்பொருளுக்கு துன்பத்தை தேடிக் கொண்டிருக்கிறான் மனிதன்.

இயற்கை தந்துள்ள இன்பங்களை அனுபவிப்பதற்கும், செயற்கையாக நாமே தேடியடையும் துன்பங்கள் வராமல் தடுப்பதற்கும் நம்மை நாமே அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டு இருக்கக்கூடிய மனிதன், பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு, விளக்கத்தை தெளிவாக பெற்று, அந்த விளக்கத்தின் வழியே தனது வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு வாழ்வதற்கான ஒரு முறையான பயிற்சியே அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக் கலையாகும். எங்களுடைய கோவை மண்டல பாரத் பெட்ரோலியம் பாரத் காஸ் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினர் பலரும் மகரிஷியின் மனவளக்கலை பயிற்சிகளை பயின்று உடல் நலம், மனவளம் பெற்று பயனடைந்து வருகின்றனர். எங்களைப் போன்று கோவை மாநகர மக்கள் உடல் நலமும், மன வளமும் பெற்று, அறிவிலே உயர்வு பெற்று, மனநிறைவுடன் உன்னதமான வாழ்க்கை வாழ, எளிய முறையிலே மனவளக்கலை பயிற்சிகளை அனைவருக்கும் கொடுக்கும் வகையில், எல்லாம் வல்ல இறையருளால், பா.நா. புதூரில் புதிதாக அறிவுத்திருக்கோவில் நிறுவப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலின் ஆன்மீக சேவை ஓங்கவும், இத்திருக்கோவிலுக்கு வரும் அன்பர்கள் உடல் நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞானம் ஓங்கி சிறப்பாக வாழவும் அருள்தந்தை அவர்களை வணங்கி இறைநிலையோடு இணைந்து வாழ்த்துகிறோம்.

**ஆர். சோமசுந்தரம்**
மண்டல மேலாளர்
பாரத் பெட்ரோலியம் (LPG), கோவை.

**Vasavi Trust**
608, Big Bazaar Street,
Coimbatore - 641 001.

**Dr. M.V. Rabindranath, B.Sc., M.D.**
Consultant Physician

# வாழ்த்துரை

அன்புடையீர்,

அறிவே தெய்வம் என விளங்கும் அறிவுத் திருக்கோயில் வாழ்க! மக்கள் மாக்களாக வாழும் நிலையை மாற்றி மனிதனாக அறிவின் வழி நிற்க அமைக்கப்பட்டு வரும் அறிவுத் திருக்கோவில்கள் வாழ்க! தனது சிறப்பையும், மொழியையும், சக்தியையும் உணர்ந்து பயன் பெறாமல் தடம் மாறிச் சென்று கொண்டிருக்கும் மக்களை திருத்துவதற்காக கோவையின் மேற்கே பா.நா.புதூரில் அமையவிருக்கும் அறிவுத் திருக்கோவில் சிறப்பாக செயல்பட வாழ்த்துகிறோம்.

மக்கள் கூடும் இடமாக மட்டுமே செயல்பட்டு வருகின்ற கோவில்கள் அறிவுத்திருக்கோவில்களாக மாற்றம் பெற்று புதுப் பாதையை அமைத்துக் கொண்டு மக்களை வழிநடத்த வேண்டும் என்ற புதுப் பார்வையைத் தந்த மகரிஷி வாழ்க. ஆங்காங்கே தமிழகமெங்கும் அமைக்கப்பட்டு வரும் அறிவுத் திருக்கோவில்கள் தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி மற்றும் உலக அமைதியை மக்களுக்கு போதிக்க வேண்டும் என்பதே மகரிஷி அவர்களது உலக சமுதாய சேவா சங்கத்தின் நோக்கமாகும். உலகெங்கும் அறிவுத் திருக்கோவில்கள் பெருகட்டும்; மனித நேயம் ஓங்கட்டும்; மனித குலம் பிறவியின் நோக்கத்தை அடைந்து பயனடையட்டும். வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்.

இப்படிக்கு
**M.V. ரபீந்திரநாத்**

---

# வாழ்த்துரை

அன்புடையீர்,

பா.நா. புதூர் ஸ்கை ஆன்மீக அறக்கட்டளை சார்பாக அமைக்கப்பட்டுள்ள அறிவுத் திருக்கோயில் ஓர் அரும்பெரும் சாதனையாகும். இதை உருவாக்கும் பணியில் அரும்பாடுபட்ட அனைவருக்குள்ளும் குருவருள் நிச்சயம் நிறைந்து இருக்கும். வேதாத்திரியம் செழிக்க அன்புள்ளங்களின் தொண்டுகள் தொடரட்டும்; அறிவு விளக்கம் பெற அருந்துணையாக அமையவுள்ள இந்த அறிவுத் திருக்கோயில் மென்மேலும் வளர சிறக்க இறையருளை வேண்டுகின்றோம்.

அன்புடன்,
**மெ. முத்துராமன்**,
பேராசிரியர் (தேனீ வளர்ப்பு), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.



வெளியேதான் தெய்வம்; இந்த தெய்வத்தைத்தான் பலர், பல ரூபங்களிட்டு, பல நாமங்களிட்டு வணங்குகிறார்கள்; எல்லோரும் வணங்குகிற இந்த வெளியை நாமும் வணங்குவோம்.

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமய கோடிகளெல்லாம் தம் தெய்வம் எந்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது? எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லதொரு சித்தாகி இன்பமாய் என்றைக்கும் உள்ளதெது? மேல்
கங்குல் பகல் அறநின்று எல்லை இலதெது? அது கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலா மோனவுரு வெளியதாகவும் கருதியஞ்சலி செய்குவோம்"

- தாயுமானவர்

நாம் கணிக்கிற காலத்திற்கு அப்பாற்பட்டு என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய வெளியே மூல மெய்ப்பொருள். மெய்ப்பொருளை உணர்வதற்கான முதற்படிதான் வாய்மை. வாக்கில் வாய்மையும், உள்ளத்தில் உண்மையும் கொண்டு ஒருவன் சத்திய வாழ்க்கை வாழும்போதுதான் அந்த மூலநிலை அகக்காட்சியாக அவனுள் மலரும். யாருடைய வாழ்க்கையேனும் சத்திய வாழ்க்கையாக அமைந்திருக்கிறதா? ஒரு சிலரது வாழ்க்கையே! ஆதிசங்கரரின் வாழ்க்கை ஓர் சத்திய வாழ்க்கை; அவருக்கு மெய்ப்பொருள் பிரம்மமாகத் தெரிந்தது. ஏசுபிரானின் வாழ்க்கை ஓர் சத்திய வாழ்க்கை; அவருக்கு மெய்பொருள் எல்லாம் வல்ல தந்தையாகத் தெரிந்தது. முகம்மது நபிகளின் வாழ்க்கை ஓர் சத்திய வாழ்க்கை; அவருக்கு மெய்ப்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அல்லாவாகத் தெரிந்தது. இவர்களைத்தான் நாம் மகான்கள் என்கிறோம்; இந்த மகான்களின் வரிசையில் இன்று நம்மோடு வாழ்பவர்தான் வேதாத்திரி மகரிஷி.

ஒருவர் மனசாட்சியை மதிக்கும்போது மனசாட்சியும் அவரை விரும்புகிறது; இந்த ஒற்றுமை பேரின்பத்தை விளைவிக்கிறது. மனசாட்சி ஓங்கியிருக்கும்போது ஐம்புலன்களின் ஆதிக்கம் குறைந்துவிடுகிறது. சத்திய வாழ்க்கையின் செறிவு அதிகமாகி உச்சக்கட்டத்தை அடையும்போது, ஐம்புலன்கள் தானாகவே அடங்கிவிடுகின்றன; ஐம்புலன்கள் அடங்கும்போது மன அலை ஒடுங்கி மனிதன் அறிவுமயமாகிறான். மூலத்தின் பேரறிவோடு சீவனின் சிற்றறிவு ஒடுங்குவதைத்தான் நாம் முக்தி என்கிறோம்; முக்தியே ஜீவ பிரம்ம ஐக்கியம்.

பேருண்மை (Eternal principle) என்று காந்திஜி கூறியதை நமது கவனத்திற்கு கொண்டு வரலாம். ஆதிமூலமே மெய்ப்பொருள்! எது ஆதி? சிறு உதாரணத்தின் மூலம் சற்று ஆராய்வோம். அடர்ந்த ஒரு மாந்தோப்பு; அங்கு ஒரு வளமான மாமரம்; மாமரத்தின் உச்சியில் ஒரு மாங்கனி; மரத்தின் கீழே அமர்ந்துள்ள நமது மனதில் ஒரு கேள்வி. மாங்கனி எதிலிருந்து வருகிறது? அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் காம்பிலிருந்து என்று யாரேனும் கூறினால், அக்கூற்று ஓரளவு உண்மை; ஆனால் முழுமையான உண்மையல்ல; மாங்கனி அந்த மரத்தின் விதையிலிருந்து வருகிறது. விதையில் ஆரம்பித்த பயணத்தில் காம்பு ஒரு நிலை; இந்த நிலை பெருகி அடுத்த நிலை மாங்கனி. நாம் யார்? எங்கிருந்து வருகிறோம்? என்ற கேள்விக்கு, யாரேனும் "பெற்றோர்களிடமிருந்து வருகிறோம்" என்று கூறினால், அது மாங்கனியானது காம்பிலிருந்து வருகிறது என்று கூறுவதை போலத்தான்; முற்றிலும் தவறுமல்ல; முடிவான உண்மையுமல்ல. மாங்கனியின் பயணம் தொடங்கியது மாவிதையில். நமது பயணம் எங்கே தொடங்கியது? இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் எங்கே ஆரம்பித்து இன்றைய நிலையை அடைந்திருக்கிறது? ஆதி முதலாக எந்த மூலத்திலிருந்து இப்பிரபஞ்சம் தோன்றியதோ அல்லது எந்த மூலம் ஞாலமாக மாறியதோ, அந்த ஆதி மூல நிலையைத்தான் மெய்ப்பொருள் என்கிறோம். நிரந்தர நிலையான அந்த மெய்ப்பொருளை ஆதிசங்கரர் "பிரம்மம்" என்றார்; ஏசு பிரான் "தந்தை" என்றார்; நபிகள் அல்லாவென்றார்; மகாத்மா காந்தியடிகள் மூல மெய்ப்பொருளை சத்தியம் என்றார்; வள்ளலார் அதை அருட்பெருஞ்சோதி என்றார்.

நாம் காண்கின்ற இந்த பௌதீகப் பிரபஞ்சம் நிலையானதல்ல; இப் பிரபஞ்சத்தில் நாம் காண்கின்ற நட்சத்திரங்கள், சூரியன், பூமி மற்றும் பிற கோள்கள் அனைத்தும் மாற்றத்திற்கு உட்பட்டவை. Nothing is permanent; change alone is permanent. அனைத்தும் மாற்றத்திற்கு உட்படுவதால் அவையெல்லாம் ஏதோ ஒரு காலகட்டத்தில் தோன்றியிருக்க வேண்டும்; மறுபடியும் ஏதோ ஒரு காலகட்டத்தில் அவையனைத்தும் முடியவும் வேண்டும்; மறுபடியும் தோன்றும்; மறுபடியும் முடியும் - புனரபி ஜனனம்; புனரபி மரணம் என்றார் ஆதிசங்கரர். என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது இங்கு ஏதாவது இருக்கிறதா? உண்டு! அதுதான் எங்கெங்கும் பரந்து கிடக்கின்ற வெளி; சுத்தவெளி! உருவாவதும் மாறுவதும், முடிவதும் பொருட்களே அன்றி வெளியல்ல! வெளி என்றென்றும் இங்கே இருக்கிற நிரந்தரம். பொருட்கள் எந்த ரூபத்தில் இருந்தாலும் அவைகள் எல்லையுடையன; இவைகளையெல்லாம் தனக்குள்ளே அலையவிட்டுக் கொண்டிருக்கிற வெளி எல்லையற்றது. எல்லையற்று, நிரந்தரமாக எங்கும் இருப்பதுதான் தெய்வமென்றால்,



# அறிவே கோயில் அன்பே வாயில்

செம்பவளப் பரிதி சிரித்து எழுந்தது போல்
வெம்புகின்ற மனங்கட்கு விடிவெள்ளி வந்ததுபோல்
அறிவைத் துணைகொண்டு அன்பை மனங்கொண்டு
செறிவுள்ள ஆன்மீகம் சிந்தையெல்லாம் விளக்கமுற

செவ்விய நோக்கோடு சிந்தனையின் போக்கோடு
கவ்விய இருள் நெஞ்சைக் கரைத்திடும் பேரொளியாய்
அறிவுத் திருக்கோயில் ஆனந்தா நகரியத்தில்
எழுந்த நிலைகாண எல்லோரும் இணைந்திடுவோம்

முதிர்ந்த பேராளர் மூலகுரு மகரிஷியார்
முன்வைத்த அடியொற்றி அய்யா மயிலானந்தன்
இன்னுரை நிகழ்த்தி நம்மை
பொன்னுலக நன்மையெல்லாம் பூவுலகில் பெற்றுவிட
புதுவழி காட்டியுள்ள பொற்புநெறி பரவட்டும்!
எழிலார்ந்த அறிவோடு திருக்கோயில் ஒளிரட்டும்!
கருணை மழையாக கடமைகள் சிறக்கட்டும்!
அறிவுத் திருக்கோயில் அகிலமெல்லாம் பிறக்கட்டும்!
ஆன்ம நெறி அன்புவழி அவனியெலாம் வாழட்டும்!

புலவர். ***முல்லை சிவம்,*** எம்.ஏ.எம்.பில்
முல்லை நகர், கோவை.

---

# பா.நா.புதூர் அறிவுத்திருக்கோயில் - திறப்புவிழா

அறநெறி இறைநெறி போதிக்கப் பல நூல்கள்
அவசியமே இல்லை இனி மேலும் மேலும்
அறநூல்கள் எத்தனையோ இந்நாள் மட்டும்
அறிஞர் பலர் அளித்துள்ள அவையே போதும்

அறம்பிறழா நெறி நின்று மக்கள் வாழ
அவசியமாம் பொருட்களோடு கல்வி கிட்ட
அறவோரே திட்டமிட்டு அமுல் செய்வீரே
அதன் மூலம் அறம் பொருள் இன்பம் வளரும் உலகம் உய்யும்.

*மகரிஷி அவர்களின் மங்கள வாழ்த்துக்களோடு எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்களும் இணைந்து நலமும், வளமும், நற்பயனும் பெருகுவதாக.*

**N.K. இராமசாமி-நாகரத்தினம் குடும்பத்தார்**
துடியலூர், கோவை.

# வாய்மை உண்மை மெய்ப்பொருள்!

வாய்மை எனப்படுது யாதெனின் யாதொன்றும்
  தீமை இலாத சொலல் - குறள்

வாக்கினில் மெய் வாய்மையாகிறது; உள்ளத்தில் மெய் உண்மையாகிறது; வாக்கில் வாய்மையும் உள்ளத்தில் உண்மையும் கொண்டு வாழும்போது நமது வாழ்வின் சாரம் சத்தியமாகிறது. சத்திய வாழ்க்கையில்தான் மெய்ப்பொருளின் தரிசனம் சாத்தியமாகிறது. வாய்மையை எல்லோரும் விரும்புகிறோம்; போற்றுகின்றோம். வாய்மைவழி நின்று, உண்மையுடன் நடக்க வேண்டுமென்றுதான், மற்ற எல்லோரையும் மட்டுமல்ல, நம்மையே நாமும் எதிர்பார்கிறோம். வாய்மையை வலியுறுத்தாத இலக்கியமே இல்லை எனலாம்.

"தன்நெஞ்சறிய பொய்யற்க" - வள்ளுவர்

"பயமெனும் பேயை அடித்தோம் - பொய்மை
  பாம்மைப் பிழந்துயிர் குடித்தோம்" - பாரதியார்

"உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார்
  உறவு கலவாமை வேண்டும் - வள்ளலார்

எவ்வளவோ முயன்றும், நம்மால் எப்போதும் வாய்மை வழி நிற்க முடியவில்லையே; ஏன்? வாய்மையானது பேரின்பத்திற்கான திறவுகோல்; பொய்மையோ இன்பத்தைப் போன்ற ஒரு மயக்கத்தை கண நேரம் தந்து முடிவில் துன்பத்தையே தருகிறது; நமது ஐம்புலன்கள் இந்த கணநேர நிலையற்ற, நியாயமற்ற இன்பத்தைத்தான் நாடுகின்றன; ஐம்புலன்களின் ஆதிக்க குரலில், மனசாட்சியின் மெல்லிய குரல் எடுபடுவதில்லை; ஆகவேதான் நாம் எப்போதும் வாய்மை வழி நிற்க முடிவதில்லை.

வாய்மை வழி நிற்காமல், பொய்மை வழி போகும்போது, மனசாட்சிக்கு எதிராக நாம் செயல்படுகிறோம்; அதனால் மனசாட்சியே நமக்கு எதிரியாகி விடுகிறது. பொய்மை மேலும் மேலும் பெருகும்போது, ஐம்புலன்களுக்கும் நமது மனசாட்சிக்கும் இடையே நிகழ்கிற போராட்டம் வலுப்படுகிறது; இந்தப் போராட்டத்தினால், நாட்கள் செல்ல செல்ல, நாம் நமது வலுவை, நிம்மதியை இழக்கிறோம்; முடிவில், மீளாத் துயரத்திற்கு ஆளாகி, நம்மையே நாம் இழக்கிறோம். "என்றைக்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்" ஆகிவிடுகிறோம்; இதை நமது புராணங்களும் தெளிவாக உணர்த்துகின்றன.



பேராற்றலை பெற்றவன் இராவணன்; சீதையை அடைய வேண்டுமென்ற நியாயமற்ற ஆசைக்காக, வாய்மை தவறி, உள்ளத்தின் உண்மை தவறி மனசாட்சியின் குரலை மீறி பொய்மை வழி நின்றான்; முடிவு? தன்னைச் சார்ந்த மக்கள், பொருள் அத்தனையும் இழந்து, யுத்த காலத்தில் தன்னையும் இழந்து, "இன்று போய் நாளை வா" என்று இழிந்துரைக்கப்படுகிறான்.

வாய்மையே பேரின்பத்திற்கான வழி; பொய்மை தருவது துன்பமே என்று கூறும்போது, நமது மனதில் ஒரு சந்தேகம் எழலாம். வாய்மை வழி நிற்காது, பொய்மையைக் கையாண்டு எத்தனையோ மனிதர்கள் பேரும் புகழுமாக, சீரும் சிறப்புமாகச் சந்தோஷமாக வாழவில்லையா? அவர்கள் என்ன கெட்டா விட்டார்கள்! என்பதே அந்த சந்தேகம். இதற்கான பதில் : அவர்கள் சந்தோஷமாக வாழ்வது போன்று தோன்றலாம்; ஆனால் அவர்களால் சந்தோஷமாக வாழ முடியாது; கெட்டுத்தான் போயிருப்பார்கள்; அந்த மனிதர்களுக்கு பெரும் சொத்துக்கள் இருக்கலாம்; கூப்பிட்டவுடன் ஓடி வர ஆட்பலம் இருக்கலாம்; ஆனாலும் அவர்களது மனதில் நிம்மதி இருக்காது; தாங்கள் எவ்வளவு கீழ்த்தரமானவர்கள் என்று அவர்களது மனசாட்சி அறியும். :One's life is as great and pure as his conscience knows" என்பார்கள்; வேறு வழியின்றி சமுதாயம் அவர்களுக்கு அடிபணியலாம்; ஆனாலும் ஒருபோதும் சமுதாயம் அவர்களை தன் நெஞ்சில் வைத்து மதிக்காது.

வெறும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, மகாத்மா காந்தியாக இன்று உலகமெங்கும் போற்றப்படுகிறார்; எதற்காக? அவருடைய பாங்கு கணக்கில் இருக்கும் பெரும் தொகைக்காகவா? அவர் கட்டிய வீடுகளின் எண்ணிக்கைக்காகவா? அவர் வாங்கிய நிலங்களின் விஸ்தீரனத்திற்காகவா? இல்லவே இல்லை. பின் எதற்காக? அவர் வாழ்ந்த சத்திய வாழ்க்கைக்காக! Truth என்பதற்கு ஒரு புதிய பரிமாணத்தையே கொடுத்தார் மகாத்மா. "God is Truth" என்று அதை உயர்த்தி, தெய்வமாக இருக்கிற மெய்ப்பொருளை உணர்வதே பேருண்மை என்ற மெய்விளக்கத்தையும் கொடுத்தார் மகாத்மா. உண்மை என்பது வாய்மை மட்டுமல்ல; எண்ணத் தூய்மையும் கூட; எண்ணத்தில் எழும் மேலோட்டமான உண்மையல்ல; எக்காலத்திலும் மாறாது நிலைத்து நிற்கக்கூடிய ஆதிமூலத்தை உண்மையென உணர்வதே பேருண்மை; அந்த ஆதி உண்மையைத்தான் நான் கடவுளென்பேன் (Truth is not only truthfulness in words, but also in thought, not only relative concept of truth but the absolute truth - the eternal principle - and that is God) என்றார் காந்திஜி.